முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004 c/w.31/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 29.08.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 29.08.2024 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | மூர் த்தி | வயது.. | 49 |
| தந்தை பெயர்.. | தங்கராசு | Official witness | Assisstant, Boovaragasamy temple, Srimushnam. |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

8. பொவாக ஸ்ரீ முஷ்ணம் பூவராகசாமி மாசி மக உற்சவத்தின் போது கோவில் இருந்து புறப்பட்டு கிள்ளைக்கு சென்று தீர்த்தவாரி முடித்துவிட்டு கோவிலுக்கு திரும்ப வரும்போது ஊர்களில் உற்வசத்தை முடித்துவிட்டு அந்த அந்த ஊர்களில் மண்டகபடி முடித்துவிட்டு திரும்பவும் கோவிலுக்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு சாமி கோவிலில் இருந்து புறப்படும்போது பட்டாச்சாரியர்களும், கோவில் மேனேஜரும் உடன்வருவார்கள் என்றால் சரிதான். சுவாமி புறப்படும்போது வாகனங்கள் இல்லாத காலத்தில் பல்லக்கில் சுவாமிமை அழைத்து வருவார்கள் என்றால் சரிதான். பல்லக்கை தூக்க 40 பேர் உடன் வருவார்கள். சுவாமி பிரசாதம் செய்வதற்கு சமையல்காரர்களும் சுவாமியுடன் வருவார்கள். மண்டகபடி செய்யும் ஊர்களுக்கு அழைப்பிதழ் கொடுப்பது வழக்கம் என்றால் அழைப்பிதழ் மண்டகபடிகாரர்களுக்கு கொடுக்கப்படும்.

9. பத்திரிக்கை எங்கு அடிக்கப்படும் என்றால் ஸ்ரீ முஷ்ணம் பூவராகசாமி கோவில் நிர்வாகத்தின் படி ஸ்ரீ முஷ்ணத்தில் அடிக்கப்படும். சா.சா.ஆ.2 -ல், 2001 -க்கு வரவு செலவு காண்பிக்கும் பட்டியலை தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த வருடத்திற்கான அமைப்பிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2001 க்கு தாக்கல் செய்யவில்லை ஆனால் அலுவலகத்தில் இருந்த பத்திரிக்கைகளை மட்டும் தாக்கல்

செய்துள்ளேன். சா.சா.ஆ.3, 1404 ம் பசலி மாசிமக உற்சவ பெருதிருவிழா என்பது 1403 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் திருத்தம் உள்ளது ஆனால் அது OC copy. அந்த குறிப்பிட்ட பத்திரிக்கையில் முழுவதுமாக திருத்தங்கல் பலவற்றை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.3 ல் 1413 ம் பசலி மாசிமக உற்சவ பெருதிருவிழா நிகழ்ச்சி நிரல் பத்திரிக்கை மேல்புவனகிரி கடைவீதியில் உள்ள லட்சுமி ஆப்செட் பிரின்டர்ஸ் என்ற விலாசத்தில் உள்ள கடையில் அச்சடிக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான், திருக்கோவிலில் குறைவான தொகையில் அச்சடிக்கப்படுவதற்காக கொடுக்கப்பட்டது.

10. அந்த பத்திரிக்கை கோவில் நிர் வாகத்தால் அச்சடிக்கப்படவில்லை என்றாலும் கோவிலில் வசித்து வரும் டி.டி.கலியபெருமாள் அச்சடித்து அப்போதைய வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட பத்திரிக்கை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வேறு எந்த ஒரு பத்திரிக்கையும் புவனகிரியில் அச்சடிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புவனகிரியில் எத்தனை மண்டகபடி உள்ளதாக சா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் 4 மண்டகபடி 1.சவுராஷ்ரா மண்டகபடி, 2.அக்கரகார தெருவில் உள்ள மண்டக படி, 3.கீழ்புவனகிரியில் ஸ்ரீனிவாச பெருமாள் கோவில், 4.புவனகிரி வர்த்தக சங்கம் கடைவீதியில் உள்ள மண்டகபடி. 4 மண்டகபடியிலும் ஏற்படும் வரவு செலவு பற்றி எங்களுடைய கோவிலுடைய நிர்வாகத்தார் ஆவணத்தில் குறிப்பிடப்படும் என்றால் மண்டகபடியில் ஏற்படும் அனைத்து வரவு செலவுகள் பற்றிய விவரம் நாங்கல் ஆவணத்தில் குறிப்பிடமாட்டோம் ஆனால் திருக்கோவிலுக்கு வழங்கப்படும் ரொக்கபட்டுவாடா மட்டும் குறித்துக்கொள்வோம். ரொக்கப்பட்டுவாடா செலுத்துவதற்கு முன்பு கோவிலில் இருந்து அழைப்பிதழ் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான், மண்டகபடி தாரர்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்படும்.

11. சா.சா.ஆ.2 ஆவணத்தில் கோவிலுடைய செயல் அலுவலர் கையொப்பமோ, மேனேஜருடைய கையொப்பமோ, பூர்த்தி செய்தவருடைய கையொப்பமோ உள்ளதா என்றால் இல்லை உபயதாரர்களிடம் இருக்கும் புத்தகத்தில் தான் கோவில் மேனேஜர் கையெழுத்து போடுவார். பணம் பட்டுவாடா செய்யும் உபயதாரர்களிடம் தான் அந்த புத்தகம் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணம் முழுவதுமாக டி.டி.கலியபெருமாள் தயார் செய்து கோவிலில் கொடுத்த பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. பத்திரிக்கை அடிப்பதற்கு முன்பு மாதிரி

பாத்திரிக்கை எழுதப்படும் என்றால் சரிதான், அவ்வாறு மாதிரி பத்திரிக்கை தயார் செய்யும்போது டி.டி.,கலியபெருமாள் சொன்னது போல் பத்திரிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் திருக்கோவில் அர்ச்சகர் மற்றும் ஸ்தலத்தார் நேரம், காலம், லக்கணம் குறிப்பிட்டு மாதிரி பத்திரிக்கை எழுதுவார்கள். உபயதாரர்கள் என்பது மண்டகபடி செய்து பணம் செலுத்தி கையொப்பம் பெறும் நபர்கள் என்றால் சரிதான்.

12. டி.டி.கலியபெருமாள் சொல்வதற்கிணங்க 2001 க்கு முன்பு ஆவணங்கள் தொலைந்து விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, ஆவணங்கள் தொலையவில்லை. கலியபெருமாளையை எனக்கு தெரியும். 2001 க்கு முன்பு உள்ள ஆவணங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. ஆவணங்களை பராமரிப்பவர் யார் என்றால் Accountant. கணக்கரை விசாரித்தால் கோவிலுக்கு என்ன என்ன ஆவணங்கள் உள்ளது என்று தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களையும் 2003 க்கு பின்னர் தயார் செய்யப்பட்டு தேதிகள் 2001, 2002, 2003 தேதிகளை குறிப்பிட்டு பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 ஆவணத்தில், 2003 ம் வருடத்திற்கு பிறகு அனைத்து பத்திரிக்கைகளும் டி.டி.கலியபெருமாள் ஆல் அச்சடிக்கப்பட்டு கோவில் நிர்வாகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி சொல்ல எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறுவிசாரணை...**

சாட்சியம் அளிக்க எனக்கு கோவில் நிர்வாகம் அதிகாரம் கொடுத்துள்ளதா என்றால் கொடுத்துள்ளது.

**பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணைக்கான குறுக்கு விசாரணை...**

கோவில் நிர்வாகம் எனக்கு எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.<br>Sd/-S.Suganiya Sri,<br>Principal District Munsif (FAC)<br>Chidambaram. |